# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., **(ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 343 /பேரூ/2025**
**நாள் : 29.01.2026**

N. சுவாமிநாதன்,
வலங்கைமான்,
திருவாரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி,
திருவாரூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் அஞ்சல், 14/43, கும்பகோணம் ரோடு என்ற முகவரியை சேர்ந்த திரு. N. சுவாமிநாதன் என்பவரது 01.09.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2025 அன்று பெறப்பட்டு, 343/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் அஞ்சல், 14/43, கும்பகோணம் ரோடு என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. N. சுவாமிநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 01.09.2025 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள 30.08.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட சர்வே எண். 715/1, (பாலுசெட்டிகுளம்) சுமார் 125 ஆண்டுகள் பழமையானது. இதன் மொத்தப் பரப்பளவு 17.54 ஹெக்டேர் அரசு குளம். இது சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக தனி நபர்கள் கொண்ட மீன்பிடி தொழில் செய்பவர்களால் மீன்பிடிப்பதற்காக ஆக்கிரமனம் செய்யப்பட்டுள்ளது. இதுநாள் வரை மீன் குத்தகை ஏலம் மற்றும்

மீன் குத்தகை வசூல் வரி (பேரூராட்சி நிர்வாகத்தின் மூலமாக) குளம் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து இதுநாள் வரை செய்யப்படவில்லை.

மேலும் மீன் வளர்க்கும் பொருட்டு ஆக்கிரமிப்பாளர்கள் அரசு குளமாகிய பாலுசெட்டிகுளத்தை கோழி இறைச்சிக் கழிவுகள், குப்பைகள், மலஜலங்களையும், மருத்துவ கழிவுகளையும் கொட்டி வருகின்றனர். மேலும் குளத்தை சுற்றி ஆகாயத் தாமரைகள் முளைத்து தூய்மையின்றி காணப்படுகிறது. இது குறித்து பலமுறை வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் S. சரவணன் அவர்களுக்கு புகார் அளிக்கப்பட்டும் எவ்விதமான தூய்மை செய்யும் பணிகளும் இதுநாளது வரையில் செய்யப்படவில்லை. G.O.No. 540ன்படி ஆக்கிரமிப்பினை அகற்றிட வருவாய்த் துறை மூலம் மனுதாரர்/புகார்தாரராகிய என்னால் முதல்வரின் முகவரி இணையப் புகாரானது 20.06.2025 அன்று ( ந. க. எண். 70-04/2025/அ2) அளிக்கப்பட்டது. சுமார் 2 மாதங்கள் கடந்தும் புகார் மனு நிலுவையில் இருந்து வருகின்றது.

மேலும் பேரூராட்சிக்கு சொந்தமான 700/46, 700/26 ஆகிய அரசு புறம்போக்கு பகுதிகளும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக ந.க. எண். 147/2025/அ2, நாள் 08.07.2025 அன்று பேரூராட்சி செயல் அலுவலரின் கடித குறிப்பின்படி ஆக்கிரமிப்பு அகற்ற உறுதியளிக்கப்பட்டது. ஆயினும் இதுநாளது வரை ஆக்கிரமிப்பு அகற்ற எவ்விதமான முயற்சிகளும் செயல் அலுவலர் மூலமாக எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் 05-வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் G. செல்வம் என்பவர் பேரூராட்சி செயல் அலுவலர் S. சரவணனுடன் இணைந்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு உடந்தையாக இருந்து வருகின்றார். எனவே மேற்படி இருவருக்கும் (செயல் அலுவலர், 05வது வார்டு உறுப்பினர்) உரிய முறையில் தங்களது உள்ளாட்சி முறைமன்றம் மூலமாக அழைப்பாணை (summon) அனுப்பி ஆக்கிரமிப்புக்குட்பட்ட நீர்நிலை (குளம்) 715/1 மற்றும் 700/46, 700/21 ஆகிய புல எண்களை மீட்க வருவாய்த் துறை மூலமாக அளவீடு மேற்கொண்டு ஆக்கிரமிப்புகளை குறித்த காலத்தில் அகற்றிட ஏற்பாடு செய்ய பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு உத்திரவிடுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.10.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 15.12.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 192/2025/அ2ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

மனுதாரரின் புகாரான திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14, நீத்துக்காரத் தெருவில் அமைந்துள்ள பாலுசெட்டிகுளம் (புல எண். 715/1) தனிநபர் வசம் உள்ளது குறித்து நடவடிக்கை எடுக்க கோரப்பட்டதை தொடர்ந்து, வலங்கைமான் வட்டாட்சியர், தனது 25.10.2025 நாளிட்ட ந.க. எண். 1979/2015/அ5-ல் புல எண். 715/1-ல் (பாலுசெட்டிக்குளம்) ஆக்கிரமனம் செய்யப்பட்டதை அகற்றுவது தொடர்பான கிராம அலுவலக பதிவேடு மற்றும் புல வரைபட நகல்கள் அனுப்பியுள்ளார். இதை தொடர்ந்து பேரூராட்சி அலுவலக 27.10.2025 நாளிட்ட கடிதத்தில் புல எண். 715/1 பாலுசெட்டிகுளம் நீர்நிலை ஆக்கிரமிப்பு

அகற்றிடவும் மற்றும் 700/46, 700/26 ஆகிய புல எண்களில் உள்ள ஆக்கிரமனங்களையும் அளவீடு செய்து அகற்றிட வலங்கைமான் வட்டாட்சியரிடம் கோரப்பட்டது. வலங்கைமான் வட்டாட்சியரின் 25.10.2025 நாளிட்ட அறிக்கையின் அடிப்படையில் பாலுசெட்டிகுளத்தினை 06.11.2025ம் தேதியில் பேரூராட்சி அலுவலகத்தில் ஏலம் கோரப்பட்டது. இதில் ஏலம் கேட்க எவரும் முன்வராத காரணத்தினால் 19.11.2025 அன்று மறு ஏலம் விட 06.11.2025 நாளிட்ட ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதற்கிடையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் (வழக்கு எண். W.P. No. 42722/2025), 06/11/2025 நாளிட்ட தீர்ப்புரையில் புல எண். 715/1-ல் உள்ள நீர்நிலை இடத்திற்கு (பாலுசெட்டிகுளம்) உயர்நீதிமன்றம் Status Quo அறிவித்து ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி குளத்தினை ஏலம் விட இயலாத நிலை உள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், இந்த நீர்நிலை சம்பந்தமான வழக்கு குறித்த விவரங்கள் பேரூராட்சி செயல் அலுவலர் என்ற முகவரிக்கு பதிலாக வட்டார வளர்ச்சி அலுவலர், வலங்கைமான் என வரப்பெற்றுள்ளது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவைகள் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மூலம் வலங்கைமான் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வரப்பெற்று, வலங்கைமான் வட்டார வளர்ச்சி அலுவலரின் 20.11.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் பேரூராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. இதையடுத்து பேரூராட்சி அலுவலக 25.11.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் தொடர்புடைய வழக்கறிஞருக்கு, செயல் அலுவலர் பேரூராட்சி என பெயர் மாற்றம் செய்யக் கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பாலுசெட்டிகுளம் (புல எண். 715/1) தொடர்பாக வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் மேல்நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. N சுவாமிநாதன் மற்றும் எதிர்மனுதாரரான வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 17.12.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. N சுவாமிநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் பேரூராட்சிக்கு சொந்தமான புல எண். 715/1–ல் 17.54 ஹெக்டேர் பரப்பளவிலுள்ள பாலுசெட்டி குளத்தை தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து மீன் பிடித்தல் தொழில் செய்தும், அக்குளத்தில் கோழி இறைச்சிகளின் கழிவுகள் மற்றும் மருத்துவக் கழிவுகள் கொட்டி வருவதால் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. மேலும் கழிவுகளை உட்கொண்டு மீன்கள் வளர்கின்றன. இவ்வகை மீன்களை பொதுமக்கள் உண்ணுவதால் சுகாதார குறைபாடு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.
- பேரூராட்சி மூலம் குளத்தை ஏலம் விடப்படாமலும், ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீன் பிடிப்பதற்கு எவ்வித வரியும் வசூலிக்கப்படாமலும் மற்றும் குளத்தை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்க எவ்வித நடவடிக்கையும் பேரூராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை . மேலும் சர்வே எண். 715/1 என்பது நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருந்து வருவதை அறிகிறேன்.

- மேலும் பேரூராட்சிக்கு சொந்தமான புல எண். 700/46, 700/26 ஆகிய அரசு புறம்போக்கு நிலமானது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. மேற்படி சர்வே எண்கள் 700/46, 700/26 ஆகியவற்றை மீண்டும் மீண்டும் ஆக்கிரமிப்பு செய்யாவண்ணம் பதிவுத் துறை மூலம் (உள்ளாட்சி முறைமன்ற ஆணை எண். 95/பேரூ./2022 நாள் 24.09.2022)-ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி பதிவு செய்திட ஆவன செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

எனவே ஆக்கிரமிப்பாளர்களுக்கு உடந்தையாக செயல்படும் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இளநிலை பொறியாளர் (A1) திரு. சீதாராமன் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். " என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரர்களான வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர் 17.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சியில் புல எண்.715/1-ல் உள்ள பாலுசெட்டி குளமானது குளம் வகைப்பாட்டிலுள்ளது என்ற அறிக்கை வலங்கைமான் வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டு, 06.11.2025 அன்று மேற்படி குளத்தினை ஏலம் கோரப்பட்டதில் ஏலம் கேட்க எவரும் முன்வராத காரணத்தினால் 19.11.2025 அன்று மறு ஏலம் விடப்பட்டது. இந்நிலையில் மேற்படி குளமானது தங்களுக்கு சொந்தமான புல எண். 285-ல் அமைந்துள்ளது எனவும், புல எண். 715/1 என தவறாக குறிப்பிட்டுள்ளதாக என தெரிவித்து, Sri Rai Raya Raya Venkatara Rao and Trust என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு (வழக்கு எண். 42722/2025) நீதிமன்றத்தால் Status Quo ஆணை வழங்கப்பட்டு வழக்கானது நிலுவையில் உள்ளது.
- வலங்கைமான் பேரூராட்சி அலுவலக ந.க. எண். 192/2025/அ2 நாள் 25.10.2025ன்படி 700/46 மற்றும் 700/26 ஆகிய புல எண்களில் உள்ள ஆக்ரமனங்களை அளவீடு செய்து அகற்றி தர வருவாய் வட்டாட்சியரிடம் கோரப்பட்டுள்ளது. நாளது தேதி வரை வருவாய் துறையினரால் அளவீடு செய்து தரவில்லை. இருப்பினும் வருவாய்த் துறையினரால் அளவீடு செய்வதற்கு இப்பேரூராட்சி மூலம் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- வருவாய்த் துறை மூலம் அளவீடு செய்யப்பட்டதின் அடிப்படையில் உரிய நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்." என தெரிவித்துள்ளனர்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் என்ற இடத்தை சார்ந்த திரு. N சுவாமிநாதன் என்பவர் தனது 01.09.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 715/1-ல் அமைந்துள்ள பாலுசெட்டிகுளத்தை ஆக்கிரமிப்பு செய்து, குத்தகை தொகை செலுத்தாமல் மீன்பிடிப்பு தொழிலை முறைகேடாக செய்து வருவதாகவும் மற்றும் புல எண். 700/46 மற்றும் 700/26 ஆகிய புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் தெரிவித்து இந்த ஆக்கிரமிப்புகளை மீட்க வருவாய்த் துறை மூலமாக அளவீடு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றிட பேரூராட்சி செயல் அலுவலருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது அறிய முடிகிறது.

மனுதாரரின் புகார் மனு குறித்து வட்டாட்சியரின் அறிக்கை கோரப்பட்டதில், வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 715/1-ல் பாலுசெட்டிகுளமானது “குளம்” என்ற வகைப்பாட்டில் உள்ளது என்ற அறிக்கை பெறப்பட்டதை தொடர்ந்து, பேரூராட்சி மூலம் மேற்படி குளத்தினை 06.11.2025 அன்று ஏலம் கோரப்பட்டதில், ஏலம் கேட்க எவரும் முன்வராததால் 19.11.2025 அன்று மறுஏலம் நடத்திட 06.11.2025 நாளிட்ட கடிதத்தில் ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இதற்கிடையில் மேற்படி பாலுசெட்டிகுளம் தங்களுக்கு சொந்தமான புல எண். 285-ல் அமைந்துள்ளதை புல எண். 715/1 என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிவித்து Sri Rai Raya Raya Venkatara Rao and Dewon Bahadur Ragumath Rao Charities மூலம் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W.P. No. 42722/2025) தொடரப்பட்டு, அவ்வழக்கில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் 06.11.2025 மற்றும் 04.12.2025 நாளிட்ட ஆணைகளில் Status Quo ஆணை வழங்கப்பட்டு, வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது.

மனுதாரரின் மற்றொரு புகாரான புல எண். 700/46 மற்றும் 700/26-ல் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து வருவாய்த் துறையினரால் அளவீடு செய்ய கோரப்பட்டுள்ளது எனவும் வருவாய்த் துறையின் அறிக்கை பெறப்பட்டவுடன் உரிய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to;-

(a) Xxxxxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act 1952 or any matter pending before a Court.

இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் புல எண். 715/1-ல் உள்ள பாலுசெட்டிகுளம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள நிலையில், மேற்படி குளமானது தங்களுக்கு சொந்தமானது என Sri Rai Raya Raya Venkatara Rao and Dewon Bahadur Ragunath Rao Charities என்பவர்களால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W.P. No. 42722/2025) தொடரப்பட்டு அவ்வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் Status Quo ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவ்வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b)-ன்படி, மனுதாரரின் புகார் மனுவினை இம்முறைமன்றம் விசாரிக்க இயலாது என்பதால், இப்புகார் மனு தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஜனவரி 29-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. N. சுவாமிநாதன்,
14/43, கும்பகோணம் ரோடு , வலங்கைமான் அஞ்சல்,
திருவாரூர் மாவட்டம் - 612 804.

2. செயல் அலுவலர்,
வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி,
திருவாரூர் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/2/26
செயலாளர்
04/02/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032